**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 301/2018

நாள்: 28.04.2026

பெயர்: மோகன் த/பெ: பக்கிரிசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1. எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 2ஆம் பிரதிவாதியிடம் இருந்து நான் கிரயம் வாங்கியதாக தாக்கல் செய்துள்ளது சான்றிட்ட நகல் ஆகும். அதன் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை ஏன் தாக்கல் செய்யவில்லை என எனது வாதுரையிலோ எனது முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதன் அசல் ஆவணமானது வேறொரு நீதிமன்றத்தில் வேறொரு வழக்கில் உள்ளது. எந்த நீதிமன்றத்தில் எந்த வழக்கில் உள்ளது என்று தெரியவில்லை. பி.வா.சா.ஆ.1 கிரய சொத்து வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் இல்லை. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பி.வா.சா.ஆ.1 அன்பழகன் என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கினேன். கிரயம் வாங்குவதற்கு முன்பு அன்பழகன் பெயரிலோ அவர் தகப்பனார் பெயரிலோ உள்ள ஆதரவுகளை பார்த்தேனா என்றால் இல்லை. அதை நீதிமன்றத்தில் தாக்கலும் செய்யவில்லை. அன்பழகன் பெயரில் பட்டா பாஸ்புக் இருந்தது. அதை வைத்து தான் பதிவு செய்தேன். பட்டா எண் தெரியுமா என்றால் 1222. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விபரத்தில் பட்டா எண் 1222 என்பதும் ஆறாவது பக்கத்தில் நான்கெல்லை விபரத்தில் இது தற்போதைய சப் டிவிசன் படி புதிய சர்வே எண் 93/2சி யில் கட்டுப்பட்டது என்பது கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2.அது ஏன் கையால் எழுதப்பட்டுள்ளது என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கிரயம் பதிவு செய்வதற்கு முன்பு

எழுதப்பட்ட பத்திரம் மறுபடியும் தட்டச்சு செய்வதற்கு சிரமப்பட்டு கையால் எழுதினோம். நான் கிரயம் வாங்கிய சமயத்தில் என் கிரய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பட்டா எண் 1222 கோவிந்தசாமி மகன் கணேசன் என்பவரின் பெயரில் சர்வே எண் 93/2ஏ க்கு 1.6 ஏர்ஸ்க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் இன்றைய தேதி வரையில் அவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். சாட்சி தாமாக முன் வந்து 93/2ஏ,பி,சி என்று சப் டிவிசன் செய்யும் பொழுது கணேசன் பெயருக்கு 93/2ஏ மற்றும் 93/2சி தவறுதலாக வந்து விட்டது. மேற்படி என் கிரய பத்திரத்தில் கண்ட பட்டா எண் 1222 கணேசன் பெயரில் உள்ளது என்பது தெரிந்து கொண்டே பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-மோகன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/-S.தனலெட்சுமி

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்